## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 266/2025** |
| Prosecution witness | : | P.W. 2(Additional witness) |
| Name | : | ரவி |
| Father's /Husband Name | : | மகாலிங்கம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 52 |
| Occupation | : | குடவாசல் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2025 ம் ஆண்டில் குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தற்போது வேறு மாவட்டத்தில் பணி புரிந்து வருவதாலும், மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 01.02.2025 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்பவருடன் சிறப்பு உதவி ஆய்வாளர் இராதாகிருஷ்ணன் மற்றும் தலைமைக் காவலர் சாமிநாதன் முதல் நிலைக் காவலர் சசிகுமார் ஆகியோர்களுடன் எங்கள் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் கண்காணித்த போது குடவாசல் பேருந்து நிலையம் அருகே ஒரு நபர் குடிபோதையில் பொது இடத்தில் கொச்சை வார்த்தைகளை சொல்லி அசிங்கமாக உரத்த குரலில் திட்டிக்கொண்டும் அவரது உடல் பகுதியின் கீழ் பகுதியில் எவ்வித ஆடை அணியாமலும் ஜட்டியுடன் அசிங்கமாக நின்று கொண்டு பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார். மேற்படி போலிசார் அந்த நபரை விசாரித்த போது செல்வராஜ் மகன் சொக்கு (எ) விஜேந்திரன் என்று தெரிந்து கொண்டுள்ளார்கள். அவரை மேற்படி உதவி ஆய்வாளர் மற்றும் அவருடன் சென்ற காவலர்கள் எச்சரித்தும் எதிரி மீண்டும் மீண்டும் அதே செய்கையில் ஈடுபட்டதால் எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து, பின் எதிரியுடன் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.43/2025 BNS சட்டப்பிரிவு 296(b) மற்றும் 4(1)(c) TNP Amended Act ன் கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 2 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் எதிரியை காவல் நிலைய பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விபரத்தினை ஆவணங்கள் அடிப்படையில் தெரிந்துகொண்டேன்.

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது BNS சட்டப்பிரிவு 296(b) மற்றும் 4(1)(c) TNP Amendment act ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 01.02.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளரே புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால சரிதான். இவ்வழக்கு புள்ளி விவரத்திற்காக போடப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுகம் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:16:50 +0530

`

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.